# யா/காரைநகர் இந்துக் கல்லூரி
# J/Karainagar Hindu College

**மகுடவாசகம்**

"உனக்கு நீயே உண்மையாய் இரு"

**Motto**

"To thine own self be true"

### தூரநோக்கு

நவீன உலகில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆளுமைமிக்க சமுதாயத்தை உருவாக்கல்.

## VISION

To make a modern world.

### பணிக்கூற்று

தேசிய கல்விக் கொள்கைக்கேற்ப சமூக உறவினூடாக பௌதீக, மனித வளங்களை மேம்படுத்தி நவீன தொழிநுட்பங்களினூடாகத் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் ஆளுமைமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கல்.

## MISSION

In accordance with the National Education Policy, develop the physical human resource using social relationship and impart a quality education by means of modern technologies and thereby bringing students of enriched personality.

# பரிசில் தினத்திற்கான குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு அ. ஜெகதீஸ்வரன் (அதிபர்) |
| உபதலைவர் | :- | திருமதி அ. ரமேஷ் (உப அதிபர்) |
| செயலாளர் | :- | திரு ச. அரவிந்தன் |
| பொருளாளர் | :- | திருமதி ச. கேசவன் |
| உறுப்பினர்கள் | :- | திரு தெ. லிங்கேஸ்வரன் |
| | | திரு கு. சரவணபவானந்தசர்மா |
| | | திரு நா. கேதாரநாதன் |
| | | திருமதி ஜெ. அருள்செல்வம் |
| | | திருமதி அ. இராசசிவம் |
| | | திருமதி ஜெ. தயாளினி |
| | | திருமதி சி. லக்ஸ்மன் |
| | | திருமதி பே. சந்திரதாசன் |
| | | திரு இ. பிரதாபன் |
| | | செல்வி வி. கிருஜா |
| | | திரு ச. சுகந்தன் |

# அதிபர் அறிக்கை

எமது பாடசாலை அன்னையின் அருகில் கோயில் கொண்டு எமக்கு அருள்பாலிக்கின்ற எல்லாம்வல்ல மடத்துக்கரை முத்துமாரி அம்மனின் பாதரக் கமலங்களை உளமாரப் பணிந்து வணங்கிக்கொண்டு இவ்வாண்டுக்கான அதிபர் அறிக்கையினை பெருமிதத்துடன் உங்கள் அனைவரது முன்னிலையில் சமர்ப்பிக்கின்றேன். உலகமெல்லாம் தன் நன்மக்கட் பெருமையினால் பெயர் பெற்று விளங்கும் எமது இந்துக் கல்லூரியின் வரலாற்றிலே வருடா வருடம் பாடசாலை அன்னையவள் தமது மாணவச் செல்வங்களுக்கு வெகுமதியளித்துக் கௌரவிக்கின்ற பொன்னான நாள் இன்று. இவ் இனிய நாள் சிறப்பாக நடைபெற ஆசியுரை வழங்கி விழா இனிதே நடைபெற வாழ்த்திய திரு கு. சண்முகராஜக் குருக்கள் அவர்களே!

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுள் பெருமையும், சிறப்பும் பெற்று புகழுடன் வீறுநடை போடும் கல்லூரி அன்னையின் சிறந்த நன்னாளாக விளங்கும் இன்றைய பரிசளிப்பு விழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தீவகக் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. ஜெகன் அவர்களே!

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தீவகக் கல்வி வலய சமூகவிஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு பா. பாஸ்கரன் அவர்களே!

எமது கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர்களே!
அயற்பாடசாலைகளின் அதிபர்களே!
எமது கல்லூரியின் முன்னாள் அதிபர், ஆசிரியர்களே!
எமது கல்லூரியின் ஆசிரியர்களே! கல்விசாரா உத்தியோகத்தர்களே!
பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே!
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே!
கனடா பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களே!
பெற்றோர்களே நலன் விரும்பிகளே!
அன்புக்குரிய மாணவர்களே!

இன்றைய நன்னாளில் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் பெருமிதமடைகின்றோம்.

**அன்பார்ந்த ஆசிரியர்களே!**

கலைத்திட்டத்தின் ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கச் சிந்தனை, தற்துணிவு, ஆராய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் போன்ற அம்சங்களைப் பெற்று சமூகத்தில் உயர்வோம் என்ற ஆர்வத்துடன் கல்லூரியின் அறிவாலயத்தினுள் கால்பதிக்கும் இளம் சிறார்களை அன்புடன் அரவணைத்து அவர்களின் செயற்பாட்டினூடாக அவர்களை மாற்றமுறும் உலகத்தின் சவால்களிற்குத்தக்கவாறு முகம் கொடுக்கும் சாதனையாளர்களாக்குவதற்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, பெறுபேறுகளில் தீவகத்தின் முதன்மைக் கல்லூரியாக பயணிக்கும் தங்களின் மகத்தான சேவைக்குத் தங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**அன்பான அபிவிருத்திக் குழுவினரே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே!**

இடைநிலை, உயர்நிலைக் கல்வியில் மங்காப் புகழ்பூத்து கல்விக் கடலில் கலங்கரை விளக்காகத் திகழும் எமது பாடசாலையின் உயர்விலும்,வளர்ச்சிப் பாதையிலும் எம்முடன் கைகோர்த்து செயற்படும் அபிவிருத்திக் குழுவினர் எமது தேவையறிந்து அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றீர்கள். அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வரும் பழைய மாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம், கனடா பழைய மாணவர் சங்கம்,லண்டன் காரை நலன்புரிச் சங்கம், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகலந்த எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**எமது பாடசாலையில் புதிதாக இணைந்துகொண்ட உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்களை வரவேற்கின்றேன்.**

யாழ் வலயப் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றி உதவி அதிபராகப் பதவியுயர்வு பெற்று எமது பாடசாலையில் கடமையாற்றும் திருமதி அ. ரமேஷ் அவர்களையும் ஏனைய வலயங்களிலிருந்து எமது பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த ஏனைய ஆசிரியர்களான செல்வி அ. டிலோஷனா, திருமதி ல. தேவகஜானன், திருமதி அ. ஜெயப்பிரதாப் ஆகியோரை வரவேற்றுக்கொள்கின்றேன்.

**இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.**

எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் பதில் அதிபராக கடந்த 3 ஆண்டுகள் கடமையாற்றிய திருமதி சிவந்தினி வாகீசன் அவர்கள் யா/இராமநாதன் கல்லூரியில் பிரதி அதிபராகவும் ஆசிரியர்களான திருமதி பத்மலீலா அமுதசிங்கம், திருமதி தனுஜா பாலமுரளி, திருமதி கிருபாலினி சுஜீவ் ஆகியோர் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைக்குச் சென்றுள்ளனர். இவர்கள் சென்ற பாடசாலைகளில் சிறப்பாக சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

## கல்விசார் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வெற்றிகள் 2019

சைவம்,தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரங்களில் நீண்டகால வரலாற்றைக் கொண்டு எமது கல்லூரி தன் மாணவர்களை தனது நிழற்குடையின் கீழ் இணைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வளர்ச்சியுற்று மேலோங்கிக் காணப்படுகின்றாள்.1AB தரத்தைச் சேர்ந்த 1000 பாடசாலை வகுதிக்குட்பட்ட தரம் 6 – 13 வரையான வகுப்புக்களைக் கொண்டு காரைநகர் பிரதேசத்தின் வளம் மிக்க ஓர் பாடசாலையாகவும்,தீவகக் கல்வி வலயத்தின் முதன்மைப் பாடசாலையாகவும் திகழ்கிறது. எமது கல்லூரி கனிஸ்ட, இடைநிலை வகுப்புக்களில் 2 சமாந்தர வகுப்புக்களையும் உயர்தரத்தில் கலை, வர்த்தக, கணித விஞ்ஞான, தொழில்நுட்ப பாடத்துறைகளையும் கொண்டு சிறப்பாக இயங்குகின்றது.

**பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் தகைமை!**

தரம் 6 – 10 வரையான மாணவர்கள் 2019ம் ஆண்டின் மூன்று தவணைகளிலும் பாட ரீதியாக 80% சதவீதத்திற்குக் கூடிய புள்ளி பெறுபவர்கள் தகைமை பெற்று பாட ரீதியாகப் பரிசில்களைப் பெறுகின்றனர். தரம் 11 மாணவர்கள் 2019ம் ஆண்டின் க.பொ.த (சா/த) பெறுபேற்றின் அடிப்படையில் பரிசில்கள் பெறுகின்றனர். தரம் 12, 13 மாணவர்கள் மூன்று தவணைகளிலும் பாட ரீதியாக 65% சதவீதத்திற்கு கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் தகைமை பெற்று பாட ரீதியாகப் பரிசில்களைப் பெறுகின்றனர். தரம் 6 – 10 வரையான மாணவர்கள் மூன்று தவணைகளிலும் 80% சதவீதத்திற்கு

கூடிய சராசரியையும் தரம் 12 – 13 மாணவர்கள் மூன்று தவணைகளிலும் 65% சதவீதத்திற்குக் கூடிய சராசரியைப் பெறுபவர்கள் தகைமை பெற்று "OPTIMI" சான்றிதழ்களையும் பரிசில்களையும் பெற்றுக்கொள்கின்றனர். 2019 இல் க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் 2018ம் ஆண்டு பெறுபேற்றின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும் 2016, 2017ம் ஆண்டுப் பெறுபேற்றின் அடிப்படையில் கல்வியியற் கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

**மாணவர் விபரம்**

| **வகுப்பு** | **மொத்தம்** |
|---|---|
| தரம் 6 | 51 |
| தரம் 7 | 67 |
| தரம் 8 | 77 |
| தரம் 9 | 70 |
| தரம் 10 | 66 |
| தரம் 11 | 61 |
| தரம் 11R | 40 |
| தரம் 12 (2021) | 38 |
| தரம் 13 (2020) | 33 |
| தரம் 13R | 39 |
| **மொத்தம்** | **542** |

**கல்விசாராஆளணியினர்**

திரு மு. சிவனேஸ்வரன் சுகாதாரத் தொழிலாளியாகவும், திரு ம. மயூரன் இரவு நேரக் காவலாளியாகவும், திருமதி பி. குருதர்சினி சமையல் உதவியாளராகவும், திரு க. மாலோன் அலுவலக உதவியாளராகவும் கடமையாற்றுகின்றனர். இவர்களுடைய தன்னலமற்ற சேவைகளை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். அத்துடன் பழைய மாணவியான செல்வி யோ. கஜேந்தினியினது அர்ப்பணிப்பான சேவையை இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

**பழைய மாணவர் சங்கம்**

தலைவர் - திரு அ. ஜெகதீஸ்வரன் - அதிபர்

செயலாளர் - திரு சு. அகிலன்

பொருளாளர் - திரு க. நிமலதாசன்

**மாணவர் முதல்வர் அமைப்பு**

பாடசாலை மாணவ முதல்வர் அமைப்பின் பொறுப்பாசிரியர்கள்:

திரு மு. ஜெயானந்தன்

திருமதி ஜெ. அருட்செல்வம்

**பாடசாலை உள்ளக மதிப்பீட்டுக்குழு**

திரு அ. ஜெகதீஸ்வரன் - அதிபர்

பொறுப்பாசிரியர்கள் - திருமதி அ. ரமேஷ்

திரு தெ. லிங்கேஸ்வரன்

திரு ச. அரவிந்தன்

திருமதி ஜெ. அருட்செல்வம்

திரு நா. கேதாரநாதன்

திரு கு. சரவணபவானந்தசர்மா

**ஆசிரியர் கழகம்**

தலைவர் - திரு கு. சரவணபவானந்தசர்மா

செயலாளர் - திருமதி பி. சோமலோஜன்

பொருளாளர் - திருமதி வ. தனரஞ்சன்

## மன்றங்கள்

**இந்துமா மன்றம்**

பொறுப்பாசிரியர் - திருமதி சி. சிவரங்கன்
தலைவர் - செல்வன் ……
செயலாளர் - செல்வி பே. தமிழினி

**கவின்கலை மன்றம்**

பொறுப்பாசிரியர் - திருமதி க. றொபேசன்
தலைவர் - செல்வி சு. லக்சிகா
செயலாளர் - செல்வி க. பூர்விகா

**ஆங்கில மன்றம்**

பொறுப்பாசிரியர் - திருமதி ஜெ. அருட்செல்வம்
தலைவர் - செல்வி தே. ஜென்சிகா
செயலாளர் - செல்வன் தி. லுகிர்தன்

**சமூக விஞ்ஞான மன்றம்**

பொறுப்பாசிரியர் - திருமதி அ. இராசசிவம்
தலைவர் - செல்வன் ச. தனராஜ்
செயலாளர் - செல்வி பே. தமிழினி

**உயர்தர மாணவர் மன்றம்**

பொறுப்பாசிரியர் - திரு இ. பிரதாபன்

தலைவர் - செல்வன் சி. அறிவரசன்

செயலாளர் - செல்வி தே. ஜென்சிகா

**கணித விஞ்ஞான மன்றம்**

பொறுப்பாசிரியர் - திரு ச. அரவிந்தன்

தலைவர் - செல்வன் சி. அறிவரசன்

செயலாளர் - செல்வி தே. ஜென்சிகா

**சுகாதார மன்றம்**

பொறுப்பாசிரியர் - திரு இ. அன்ரன் விமலதாஸ்

தலைவர் - செல்வன் ச. தனராஜ்

செயலாளர் - செல்வி வ. பவீனா

**விளையாட்டுத்துறை**

பொறுப்பாசிரியர் - திரு இ. அன்ரன் விமலதாஸ்

**போக்குவரத்து ஒழுங்கமைப்புக் குழு**

பொறுப்பாசிரியர் - திரு தே. லிங்கேஸ்வரன்
திரு ந. கேதாரநாதன்
திரு இ. அன்ரன் விமலதாஸ்

**பாண்ட் அணி**

பொறுப்பாசிரியர் - திருமதி ல. தேவகஜானன்

இம்மன்றங்களின் செயற்பாடுகள் மாதம் ஒரு தடவை சிரேஸ்ட பிரிவினர் பிரதி புதன்கிழமைகளிலும், கனிஸ்ட பிரிவினர் பிரதி வியாழக்கிழமைகளிலும் அவ்வப் பொறுப்பாசிரியர்களின் நெறிப்படுத்தல்களுக்கமைய ஒன்றுகூடி மாணவர்களது ஆளுமை விருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்தி வருகின்றனர். தமிழ்த்தினப் போட்டி, கணித வினாடிவினாப் போட்டி, விஞ்ஞான வினாடிவினாப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, வணிகப் போட்டிகளில் மாணவர்களை கோட்ட,வலய மற்றும் மாகாண மட்டங்களில் பங்குபற்றச் செய்து சாதனைகளைப் புரிவதற்கு இம்மன்றச் செயற்பாடுகள் பெரிதும் உறுதுணையாக அமைவதால் இவர்களது செயற்பாடுகள் மேலும் வளரவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

## பாடவிதான செயற்பாடுகள்

2019 இல் கல்வித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட நிதியின் மூலம் மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டங்கள், உள்ளக மேற்பார்வை, ஆலோசனை வழிகாட்டல் கண்காணிப்பு, தொடர் மதிப்பீடு ஆகியவற்றின் விளைவாக, 2019ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வி வி. கஜந்தினி என்ற மாணவி 8A, B சித்திகளைப் பெற்றுள்ளதுடன் 2019ம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் கணிதத்துறையில் செல்வி தே. கம்சிகா, வணிகத்துறையில் செல்வி சோ. உசாந்தினி, கலைத்துறையில் செல்வன் பே. அலெக்சன், செல்வி அ. எஸ்தர் ஆகியோர் A, B, C சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

**2019 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் உயர்தரம் கற்கத் தகுதிபெற்றோர்**

| வருடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2014 | 47 | 34 | 72% |
| 2015 | 65 | 40 | 62% |
| 2016 | 62 | 55 | 69% |
| 2017 | 77 | 61 | 79% |
| 2018 | 63 | 42 | 66% |
| 2019 | 57 | 28 | 50% |

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு - 2019**

| பாடம் | சித்தி வீதம் | பாட ஆசிரியர் |
|---|---|---|
| தமிழ்மொழி | 88% | செல்வி ம. மனஸ்வினி<br>திரு இ. பிரதாபன் |
| ஆங்கிலம் | 44% | திருமதி சி. வாகீசன்<br>திருமதி ஜெ. அருட்செல்வம் |
| கணிதம் | 54% | திரு ந. கேதாரநாதன்<br>செல்வி ம. டயானா |
| விஞ்ஞானம் | 37% | திரு ச. அரவிந்தன்<br>திருமதி த. பாலமுரளி |
| வரலாறு | 68% | திருமதி க. சந்திரமோகன் |
| சைவசமயம் | 85% | திருமதி சி. சிவரங்கன் |
| கிறிஸ்தவ சமயம் | 64% | திருமதி ய. நெல்ஸ்மன் |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | 100% | திருமதி ஜெ. தயாளினி |
| புவியியல் | 82% | திருமதி சி. தர்சன் |
| குடியியற் கல்வி | 67% | செல்வி வி. கிரிஜா |
| சங்கீதம் | 88% | திருமதி க. றொபேசன் |
| சித்திரம் | 95% | திரு இ. ஜீவராஜ் |
| நடனம் | 100% | திருமதி பி. சோமலோஜன் |
| நாடகமும் அரங்கியலும் | 100% | திருமதி வி. ரமணன் |
| தமிழ் இலக்கியம் | 100% | திரு இ. பிரதாபன் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 94% | திருமதி சி. லக்ஸ்மன் |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 93% | திரு ஐ. அன்ரன் விமலதாஸ் |
| முயற்சியாண்மை | 87% | திருமதி ப. அமுதசிங்கம் |
| விவசாயம் | 20% | செல்வி கி. கஸ்தனி |

தீவகக் கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலை என்ற வகையில் கடந்த ஐந்து வருடகால பெறுபேறுகளை நோக்கும் போது 2019 இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 50% ஆனவர்கள் க.பொ.த. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2019ம் ஆண்டில்

எமது கல்லூரியில் அனைத்து மாணவர்களும் “C” தரத்திற்கு மேற்பட்ட பெறுபேற்றினைப் பெற்ற பாடத்தொகுதி 1 இல் உள்ளடக்கப்படும் பாடமான வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 14 மாணவர்களில் 8 மாணவர்கள் “A” தரச் சித்தியினையும் 2 மாணவர்கள் “B” தரச் சித்தியினையும் 4 மாணவர்கள் “C” தரச் சித்தியினையும் பெற்றுள்ளனர். அதேபோல் தொகுதி 2 இல் உள்ளடக்கப்படும் தமிழ் இலக்கியம் பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 03 மாணவர்களில் “A, B, C” தரச் சித்திகளை தலா 01 மாணவர்கள் வீதம் பெற்றுள்ளனர். இப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு காரணமாக இருந்த வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பாட ஆசிரியர் திருமதி தயாளினி ஜெயக்குமார் ஆசிரியர் மாகாண மட்ட சாதனையாளர்களாக மாகாண கல்வித் திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டார். இப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் பெறுபேற்றினைப் பெறுவதற்கு காரணமாக இருந்த ஆசிரியர்களையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

| இல | பாடம் | சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | **2015** | **2016** | **2017** | **2018** | **2019** |
| 1 | சைவசமயம் | 94 | 96 | 83 | 80 | 85 |
| 2 | கிறிஸ்தவ சமயம் | 100 | 100 | 100 | 66 | 64 |
| 3 | தமிழ்மொழி | 91 | 89 | 84 | 84 | 88 |
| 4 | ஆங்கிலம் | 23 | 15 | 17 | 16 | 44 |
| 5 | விஞ்ஞானம் | 49 | 47 | 48 | 40 | 37 |
| 6 | கணிதம் | 45 | 55 | 40 | 48 | 54 |
| 7 | வரலாறு | 66 | 74 | 47 | 65 | 68 |
| 8 | வணிகமும் கணக்கீட்டு கல்வியும் | 86 | 100 | 100 | 80 | 100 |
| 9 | புவியியல் | 96 | 100 | 91 | 100 | 82 |
| 10 | குடியியற் கல்வி | 100 | 68 | 37 | 23 | 67 |
| 11 | சங்கீதம் | 80 | 100 | 100 | 87 | 88 |
| 12 | சித்திரம் | 57 | 73 | 96 | 63 | 95 |
| 13 | நடனம் | 100 | 100 | 100 | 100 | 100 |
| 14 | நாடகமும் அரங்கியலும் | 100 | 100 | 96 | 100 | 100 |
| 15 | தமிழ் இலக்கியம் | - | - | - | - | 100 |
| 16 | தகவல் தொழில்நுட்பம் | 91 | 65 | 79 | 100 | 94 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | சுகாதாரமும் உடற்கல்வியும் | 77 | 61 | 64 | 81 | 93 |
| 18 | முயற்சியாண்மை | - | - | - | 80 | 87 |
| 19 | விவசாயம் | - | - | -- | 75 | 20 |
| 20 | ஊடகக்கல்வி | - | - | - | - | 100 |

## க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு – 2019

| பாடம் | சித்தி வீதம் | பாட ஆசிரியர் |
|---|---|---|
| இணைந்த கணிதம் | 100 | செல்வி ம. சுகன்யா |
| பௌதீகவியல் | 100 | திரு மு. ஜெயானந்தன் |
| இரசாயனவியல் | 50 | திரு ச. அரவிந்தன்<br>செல்வி வி. தட்சாயனி |
| பொறியியல் தொழில்நுட்பம் | 75 | திரு மு. ஜெயானந்தன் |
| உயிரியல் தொழில்நுட்பம் | 100 | செல்வி கி. கஸ்தனி |
| விவசாய தொழில்நுட்பம் | 100 | திரு ஞா. கிரிதரன் |
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 62 | திரு ச. அரவிந்தன்<br>செல்வி வி. தட்சாயனி |
| கணக்கீடு | 71 | திருமதி ப. அமுதசிங்கம் |
| வணிகக்கல்வி | 86 | திருமதி ஜெ. தயாளினி |
| பொருளியல் | 71 | திருமதி ச. கேசவன்<br>திருமதி து. புஸ்பகாந்தன் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 50 | திருமதி சி. லக்ஸ்மன் |
| தமிழ்மொழி | 100 | திரு இ. பிரதாபன் |
| இந்துநாகரிகம் | 100 | திருமதி சி. சிவரங்கன் |
| வரலாறு | 60 | திருமதி ஜெ. ஜெயக்குமார் |
| புவியியல் | 75 | திருமதி அ. இராசசிவம் |
| நடனம் | 100 | திருமதி பே. சந்திரதாசன் |
| நாடகமும் அரங்கியலும் | 100 | திருமதி வி. ரமணன் |
| அரசியல் விஞ்ஞானம் | 100 | செல்வி வி. கிரிஜா |
| சங்கீதம் | 100 | திருமதி க. றொபேசன் |
| பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | திருமதி சி. லக்ஸ்மன் |

## 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர்

| | தோற்றியோர் | அனுமதிக்கு தகுதிபெற்றோர் |
|---|---|---|
| விஞ்ஞானப் பிரிவு | 02 | 02 |
| தொழில்நுட்பப் பிரிவு | 08 | 06 |
| வர்த்தகப் பிரிவு | 07 | 05 |
| கலைப் பிரிவு | 20 | 15 |

| இல | பாடம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| 1 | உயிரியல் | 100 | 100 | 100 | 66.66 | - |
| 2 | இணைந்த கணிதம் | - | - | 50 | 50 | 100 |
| 3 | பௌதீகவியல் | 100 | 50 | 33.33 | 40 | 100 |
| 4 | இரசாயனவியல் | 50 | 100 | 33.33 | 40 | 50 |
| 5 | பொறியியல் தொழில்நுட்பம் | - | 100 | 100 | 100 | 75 |
| 6 | உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் | - | 100 | 100 | 90 | 100 |
| 7 | விவசாய விஞ்ஞானம் | - | 60 | 64 | 70 | 100 |
| 8 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | 66 | 100 | 86 | 50 |
| 9 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - | 50 | 71 | 88 | 62 |
| 10 | கணக்கீடு | 56 | 100 | 100 | 75 | 71 |
| 11 | பொருளியல் | 69 | 100 | 100 | - | 86 |
| 12 | வணிகக் கல்வி | 83 | 100 | 100 | 100 | 71 |
| 13 | பொதுத் தகவல் தொடர்பாடல் | - | 75 | 75 | 98 | - |
| 14 | தமிழ் | 87 | 95 | 100 | 77 | 100 |
| 15 | இந்து நாகரிகம் | 100 | 100 | - | 100 | 100 |
| 16 | வரலாறு | 83 | 100 | 83.33 | 100 | 60 |
| 17 | புவியியல் | 80 | 100 | 100 | 100 | 75 |
| 18 | நாடகமும் அரங்கியலும் | 100 | 100 | - | 100 | 100 |
| 19 | நடனம் | 84 | 100 | 100 | 100 | 100 |
| 20 | சங்கீதம் | 87 | 100 | - | 100 | 100 |
| 21 | சித்திரம் | 75 | 100 | 100 | - | - |
| 22 | அரசியல் விஞ்ஞானம் | - | 100 | 66.66 | 100 | 100 |
| 23 | கிறிஸ்தவ நாகரிகம் | - | - | - | 100 | 100 |

உயர்தர பெறுபேற்றை நோக்கும் போது ஒரு சில பாடங்களில் சிறிது வீழ்ச்சிப் போக்கு காணப்படுகின்ற போதிலும் ஏனைய பாடங்களில் உயர்ச்சிப் போக்கு காணப்படுகின்றது. சிறந்தபெறுபேற்றைப் பெற்ற மாணவர்களையும் அவர்களை வழிநடாத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**2019 ஆம் கல்வியாண்டின் மேற்கொள்ளப்பட்ட பௌதீகவள அபிவிருத்தி**

- கம்பரெலிய திட்டத்தில் 100,000 ரூபாவுக்குரிய வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.
- கல்வி அமைச்சின் நிதியுதவியின் கீழ் Smart Class Room ற்கான வேலைகள் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

## புலமைப்பரிசில்

எமது கல்லூரியின் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பின்வரும் புலமைப்பரிசில் நிதியுதவியைப் பெற்று வருகின்றனர்.

- தரம் 5 புலமைப்பரிசில் நிதி

  தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6 இல் கல்விகற்கும் 05 மாணவர்களுக்கு திரு மாணிக்கம் கனகசபாபதி அவர்களும் மேலும் 01 மாணவனுக்கு திருமதி கனகமலர் சிவலிங்கம் அவர்களும் மாதாந்த உதவித் தொகையினை வழங்கி வருகின்றனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.
- ஜனாதிபதி புலமைப்பரிசில் நிதி
- தியாகராஜா புலமைப்பரிசில் நிதி

  தியாகராசா நம்பிக்கை நிதியத்தினரால் தரம் 12, 13 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.
- சிப்தொற புலமைப்பரிசில் நிதி

## கல்லூரியின் தேவைகள்

- தொழில்நுட்ப துறையை கற்கும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதால் தொழில்நுட்ப பீடம் அமைக்கப்படல் வேண்டும்.
- பாடசாலையின் இரண்டு பகுதிகளுக்குமான நுழைவாயில்களுக்கான பெயர் வளைவு அமைத்தல்.
- விளையாட்டு மைதானத்தின் வடக்குப்புறம் புனரமைப்பு செய்தல்.
- விளையாட்டு மைதானத்தின் வடக்குப்புறம் வேலியமைத்தல்.
- தொகுதிப்பாடங்களுக்கான அறைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

**பாடசாலை எதிர்நோக்கும் சவால்கள்**

- சிறந்த பெறுபேறு பெற்ற உயர்தர கணித விஞ்ஞான துறையை தெரிவு செய்யும் மாணவர்கள் நகரை நோக்கிச் செல்லல்.
- அதிகமான ஆசிரியர்கள் வெளிப்புற தேசத்திலிருந்து வருகை தருகின்றமை.
- ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்று வரும் ஆசிரியர்கள் அதிகமாக உள்ளமை.
- 85% ற்கு அதிகமான மாணவர்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டமை.

இதனடிப்படையில் தேசிய கல்விக் கொள்கைக்கேற்ப சமூக உறவினூடாக பௌதீக, மனித வளங்களை மேம்படுத்தி நவீன தொழினுட்பங்களினூடாகத் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் ஆளுமை மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கல் எனும் கல்லூரியின் பணிக்கூற்றை நிறைவு செய்யும் பொருட்டான அடித்தளம் பாடசாலையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் கல்லூரியின் தூரநோக்கான நவீன உலகில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆளுமை மிக்க சமுதாயம் என்பதன் இலக்குப் பயணம் வெகுதூரம் இல்லை என்பதை எம் கல்லூரிக் குடும்பம் பறைசாற்றி நிற்கின்றது எனும் நற்செய்தியை கூறி பரிசில் தின அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

# நன்றியுரை

எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. ஜெகன் அவர்கள் பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியில் இன்றைய தினம் கலந்து பரிசு வழங்கி மாணவச் செல்வங்களுக்கு உற்சாகமளித்தமைக்காகவும் எமது மனம் நிறைந்த நன்றிகளை கல்லூரிச் சமூகத்தின் சார்பில் கூறிக்கொள்கின்றேன்.

தீவக கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு பா. பாஸ்கரன் அவர்கள் கலந்து சிறப்பித்தமைக்காக அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் எமது மாணவர்களுக்கான பரிசுத் தினத்தை நடாத்துவதற்கு நிதியனுசரணை வழங்கிய வைத்தியகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரட்ணம் நம்பிக்கை நிதியத்தின் உரிமையாளரான கனடா வாழ் பழைய மாணவர் வைத்தியகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரட்ணம் அவர்கள் 2014ம் ஆண்டில் வருடாந்தப் பரிசில்தின நிகழ்விற்காக வருடாந்த வட்டியை பயன்படுத்தும் வகையில் வைத்தியகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரட்ணம் நம்பிக்கை நிதியத்தினை வழங்கிய வைத்தியகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரட்ணம் அவர்களுக்கும் கனடா பழைய மாணவர் சங்கத்தினர், லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர், எமது பழைய மாணவர் சங்கத்தினர் (தாய்ச்சங்கம்) ஆகியோருக்கு எனது சிறப்பான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவரது தன்னலமற்ற சேவை தொடர்ந்து எமது கல்லூரிக்கு கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அத்துடன் ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கிய திருமதி மனோன்மணி தம்பிராசா அவர்களுக்கும் திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தம் அவர்களுக்கும் திரு மாணிக்கம் கனகசபாபதி அவர்களுக்கும் திரு கனக சிவகுமாரன் அவர்களுக்கும், திருமதி கமலாதேவி தர்மநாயகம் அவர்களுக்கும், கனடாக்கிளை பழைய மாணவர் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் எமது அழைப்பை ஏற்று இங்கு வருகைதந்துள்ள ஓய்வுநிலை அதிபர்கள், அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், எமது பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் அனைவருக்கும் எனது இதயம்கனிந்த நன்றிகளைச் சொரிகின்றேன்.

மேலும் கல்லூரியின் உயர்விற்காக தமது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி இன்றும் இக் கல்லூரிக்காக உழைத்து நிற்கும் முன்னாள் அதிபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது கல்லூரியின் செயற்பாடுகளில் தோளோடு தோள் நின்று உதவி வரும் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். மேலும் இம் மலரை அழகாக வடிவமைத்து பதிப்பித்துத் தந்த ES Printers நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்..

இக் கல்லூரி தனது இலக்கை அடைவதற்கு எல்லோரும் ஒருங்கிணைந்து உதவிக்கரம் நீட்டி வினைத்திறன் மிக்கதும் விளைதிறன் கொண்ட பயனுறுதி மிக்கதுமான கல்லூரியாகத் திகழ எல்லாம் வல்ல மடத்துக்கரை அம்மனின் அருள்வேண்டி பரிசளிப்பு விழா அறிக்கையைச் சமர்ப்பித்து நிறைவு செய்து விடைபெறுகின்றேன்.

திரு அ. ஜெகதீஸ்வரன்
அதிபர்
யா/காரைநகர் இந்துக் கல்லூரி.

# பரிசில் பெறுவோர் விபரம் - 2020

# தரம் 6

| இல | பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 01 | ர. நிலமிதன் | சித்திரம், ஆங்கிலம், ICT | 1 |
| | | தமிழ், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் | 2 |
| | | சமயம், புவியியல், PTS | 3 |
| | | குடியியல், சிங்களம் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 02 | க. நிரோஜன் | விஞ்ஞானம், நாடகம் | 1 |
| | | ICT, சிங்களம் | 2 |
| | | புவியியல், சமயம், கணிதம், ஆங்கிலம், PTS, சுகாதாரம், குடியியல் | 3 |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 03 | சி. நவநிதி | சிங்களம், வரலாறு, சுகாதாரம், புவியியல், சமயம், சங்கீதம் | 1 |
| | | PTS, குடியியல் | 2 |
| | | ஆங்கிலம் | 3 |
| | | ICT, கணிதம், விஞ்ஞானம் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 04 | சி. சங்கவி | சமயம் | 2 |
| | | சங்கீதம் | 3 |
| | | PTS, விஞ்ஞானம், புவியியல், குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| 05 | மு. நிருசனா | சமயம், விஞ்ஞானம், ஆங்கிலம், புவியியல், குடியியல் | சராசரி 80க்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| 06 | ரூ. சோபிதன் | கணிதம், வரலாறு | 3 |
| | | சமயம், புவியியல், விஞ்ஞானம், ஆங்கிலம், குடியியல், சுகாதாரம், PTS, சிங்களம் | சராசரி 80க்கு மேல் |
| 07 | இ. நிபீசனன் | தமிழ், குடியியல், கணிதம், PTS | 1 |
| | | சங்கீதம், புவியியல் | 2 |
| | | சிங்களம் | 3 |
| | | விஞ்ஞானம், ஆங்கிலம், ICT | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 08 | யோ. ஹர்சன் | வரலாறு | 2 |
| | | விஞ்ஞானம் | 3 |
| | | சிங்களம், கணிதம், புவியியல், சங்கீதம், ICT, குடியியல், ஆங்கிலம், PTS | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 09. | த. டனுப்பிரியன் | கணிதம், விஞ்ஞானம் | சராசரி 80க்கு மேல் |
| 10 | த. ரம்சாயினி | நடனம் | 3 |
| | | குடியியல், கணிதம், விஞ்ஞானம் | சராசரி 80க்கு மேல் |
| 11 | ச. ஹரிஸ்காந் | ஆங்கிலம் | 2 |
| | | கணிதம், விஞ்ஞானம் | சராசரி 80க்கு மேல் |
| 12 | கா. விஸ்ணுகா | ஆங்கிலம், குடியியல், கணிதம், சங்கீதம், விஞ்ஞானம், புவியியல், PTS | சராசரி 80க்கு மேல் |
| 13 | பு. தமிழ்நிலா | நடனம் | 1 |
| | | குடியியல், ஆங்கிலம், சிங்களம் | சராசரி 80க்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| 14 | பி. பிரியங்கா | சங்கீதம், புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 15 | சி. ராகவி | சங்கீதம், புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 16 | சு. தட்சாயினி | நடனம | 1 |
| 17 | த. தரணிபன் | புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 18 | த. தர்மினி | புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 19 | சு. கஜமுகன் | ICT | 3 |
| | | குடியியல், புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 20 | ஜ. ஜதுசன் | புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 21 | கி. அபிஷாந் | புவியியல், குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| 22 | பே. தமிழ்நிலா | குடியியல், PTS | சராசரி 80க்கு மேல் |
| 23 | அ. ரிஷாந் | குடியியல் | சராசரி 80க்கு மேல் |

# தரம் 7

| இல | பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 24 | ரா. நவநீதன் | புவியியல், சுகாதாரம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, PTS, ICT | 1 |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 25 | ந. நிதுசன் | தமிழ் | 2 |
| | | ஆங்கிலம், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 26 | செ. ரிசாந்தன் | தமிழ் | 3 |
| | | குடியுரிமைக்கல்வி, சமயம், நாடகமும் அரங்கியலும், PTS | சராசரி 80க்கு மேல் |
| 27 | த. மதுசன் | தமிழ், ஆங்கிலம், சமயம், நாடகமும் அரங்கியலும், குடியுரிமைக்கல்வி, | 1 |
| | | புவியியல் | 2 |
| | | ICT | 3 |
| | | கணிதம் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 28 | இ. பானுஜன் | சுகாதாரம், PTS | 2 |
| | | நாடகமும் அரங்கியலும், கணிதம், ஆங்கிலம், புவியியல் | 3 |
| | | குடியுரிமைக்கல்வி, தமிழ், சமயம் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 29 | ம. தமிழ்நிலா | குடியுரிமைக்கல்வி | 2 |
| | | PTS | 3 |
| | | தமிழ் | சராசரி 80க்கு மேல் |
| 30 | ச. சரண் | தமிழ், சமயம், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 31 | உ. சானுஜா | தமிழ், கிறிஸ்தவ சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 32 | த. சோபிகா | தமிழ், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 33 | யோ. கபிசாந் | தமிழ், சமயம், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| 34 | த. துவாரகன் | குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 35 | பூ. கபிலன் | தமிழ், சமயம், ஆங்கிலம், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 36 | சி. ரஜீபன் | கணிதம், ஆங்கிலம், குடியுரிமைக்கல்வி, PTS | 1 |
| | | ICT | 2 |
| | | சமயம் | 3 |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 37 | ம. யசீபன் | சமயம், புவியியல், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 38 | க. தெய்வச்சிட்டு | ஆங்கிலம், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 39 | ஜெ. டனுசிகா | சங்கீதம் | 1 |
| 40 | ப. மதுசா | சங்கீதம், குடியுரிமைக்கல்வி | 2 |
| 41 | அ. பவிசா | சங்கீதம் | 3 |
| 42 | தெ. சர்மினி | நடனம் | 1 |
| 43 A | ரி. துசாங்கன் | நாடகமும் அரங்கியலும், புவியியல், குடியியல், PTS | சராசரி 80க்கு மேல் |
| 43 B | ம. மகிந்தினி | குடியியல் | சராசரி 80க்கு மேல் |

# தரம் 8

| இல | பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 44 | கு. வைஸ்ணவி | வரலாறு, புவியியல், PTS, குடியியல், ஆங்கிலம், சமயம், சுகாதாரம், விஞ்ஞானம் | 1 |
| | | தமிழ், நாடகம் | 2 |
| | | சிங்களம் | 3 |
| | | கணிதம், ICT | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 45 | சா. தவலோசனா | சிங்களம், கணிதம், நடனம் | 1 |
| | | சமயம், சுகாதாரம் | 2 |
| | | விஞ்ஞானம், வரலாறு, ICT, PTS | 3 |
| | | தமிழ், ஆங்கிலம், குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 46 | செ. மயூரிகா | ஆங்கிலம், PTS. வரலாறு, புவியியல், ICT, சிங்களம், குடியியல் | 2 |
| | | நடனம், சமயம், கணிதம், சுகாதாரம் | 3 |
| | | தமிழ், விஞ்ஞானம் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 47 | ஜெ. சாகித்தியா | தமிழ், சங்கீதம், ICT | 1 |
| | | கணிதம், விஞ்ஞானம் | 2 |
| | | ஆங்கிலம், புவியியல் | 3 |
| | | சமயம், சுகாதாரம், வரலாறு, PTS, சிங்களம், குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |

| | | | |
|---|---|---|---|
| 48 | க. துவாரகன் | நாடகம் | 2 |
| | | சமயம், தமிழ், கணிதம், குடியியல், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 49 | சி. இசைநிலா | சமயம், தமிழ், PTS, குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| 50 | நி. புவிதா | தமிழ் | 3 |
| | | சமயம், சுகாதாரம், நடனம், சிங்களம், குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 51 | வி. சதுர்சி | நாடகம் | 1 |
| | | சமயம், தமிழ், PTS, சிங்களம், குடியியல் | சராசரி 80க்கு மேல் |
| 52 | சர்மிளா | குடியியல் | 3 |
| | | சமயம், தமிழ், PTS | சராசரி 80க்கு மேல் |
| 53 | ப. மேனகா | சமயம், தமிழ் | சராசரி 80க்கு மேல் |
| 54 | ந. கதிர்நிலா | சிங்களம், குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 55 | சு, டினுசன் | குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 56 | பி. பிரசாயினி | குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 57 | ச. துவாரகா | குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |
| 58 | கோ. பவிசாளி | குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |

# தரம் 9

| இல | பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 59 | ஜெ. சரண்யா | தமிழ், சமயம், குடியியல், சங்கீதம், வரலாறு | 1 |
| | | ICT | 2 |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 60 | த. விதுசாளினி | ICT, ஆங்கிலம், புவியியல், சிங்களம் | 1 |
| | | தமிழ், சங்கீதம் | 2 |
| | | சமயம், கணிதம் | 3 |
| | | OPTIMI சான்றிதழ் | |
| 61 | அ. ஹர்ணி | சமயம் | 2 |
| 62 | ச. ஜெனிதா | சுகாதாரம், கணிதம், விஞ்ஞானம் | 1 |
| | | சங்கீதம் | 3 |
| | | சமயம், ICT | சராசரி 80க்கு மேல் |
| 63 | தே. சரணியா | ICT | 3 |
| | | சமயம், கணிதம் | சராசரி 80க்கு மேல் |
| 64 | ப. சாரங்கன் | சுகாதாரம், விஞ்ஞானம், குடியியல் | 2 |
| | | சமயம், கணிதம் | சராசரி 80க்கு மேல் |
| 65 | ம. நித்தியா | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 66 | ஸ். பாலகௌரி | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 67 | த. டனுசியா | நாடகம் | 1 |
| | | சமயம், கணிதம் | சராசரி 80க்கு மேல் |
| 68 | ப. லக்சி | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 69 | தி. ஜயகலா | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 70 | நா. கிரிசன் | கிறிஸ்தவ சமயம் | சராசரி 80க்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| 71 | வி. பிரசாதனன் | கணிதம் | 2 |
| 72 | சு. ஜஸ்ரின்ராஜ் | சித்திரம் | 1 |

# தரம் 10

| இல | பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 73 | தி. ஆதிரை | தமிழ், சுகாதாரம், சங்கீதம் | 1 |
| | | புவியியல் | 2 |
| | | சமயம், வரலாறு | 3 |
| 74 | உ. பிருந்தா | புவியியல், வரலாறு, சமயம், நடனம் | 1 |
| | | தமிழ், சுகாதாரம் | 2 |
| 75 | த. கீர்த்திகா | நடனம், ICT | 1 |
| | | சமயம், வணிகம் | 2 |
| | | தமிழ் | 3 |
| 76 | பே. விஜிதா | சமயம் , புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 77 | ச. தனுஜன் | கணிதம், வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | 1 |
| | | சமயம், வரலாறு | சராசரி 80க்கு மேல் |
| 78 | த. தனுசா | தமிழ் இலக்கியம் | 1 |
| | | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 79 | சி. பவித்திரா | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 80 | வ. கஜகரன் | வரலாறு | 2 |
| | | புவியியல் | 3 |
| | | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 81 | கி. லக்சனா | சமயம் | சராசரி 80க்கு மேல் |
| 82 | ந. சிவப்பிரியன் | புவியியல் | சராசரி 80க்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| 83 | கோ. கஜீபன் | புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 84 | ம. பானுஜன் | புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 85 | வி. அபிராம் | புவியியல் | சராசரி 80க்கு மேல் |
| 86 | கு. ஜஸ்மினி | குடியுரிமைக்கல்வி | சராசரி 80க்கு மேல் |

# தரம் 12 (A/L 2021)

| இல | பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 87 | சி. அறிவரசன் | Engineering Technology | 1 |
| | | Science for Technology | 3 |
| 88 | ச. சிவச்செல்வன் | Engineering Technology, ICT | 2 |
| | | Science for Technology, GIT | 1 |
| 89 | ச. சரண்ராஜ் | Engineering Technology | 3 |
| 90 | அ. கம்சிகா | ICT | 1 |
| 91 | சி. வனிதா | ICT | 3 |
| | | Bio Technology, GIT | 2 |
| 92 | தே. ஜென்சிகா | Bio Technology, Agriculture Science | 1 |
| | | Science for Technology | 2 |
| 93 | உ. றொபின்ராஜ் | Bio Technology, Agriculture science | 3 |
| 94 | ச. விசாகதீபன் | Science for Technology, GIT | 3 |
| 95 | ந. பிரியதர்சன் | Agriculture science | 2 |
| 96 | வ. கஜேந்திரன் | உயிரியல் | 1 |
| 97 | தி. லுகிர்தன் | கணக்கீடு | 1 |
| | | வணிகக்கல்வி, பொருளியல் | 2 |
| 98 | அ. கோபிகா | வணிகக்கல்வி, பொருளியல் | 1 |
| | | கணக்கீடு | 2 |
| 99 | சு. லக்சிகா | தமிழ் , நடனம் | 1 |
| 100 | பே. தமிழினி | தமிழ் | 2 |
| | | புவியியல் | 1 |
| 101 | ச. கஜானி | தமிழ் | 3 |
| | | இந்துநாகரிகம் | 1 |
| 102 | பே. பிரசாந் | தமிழ் | 3 |
| 103 | க. பூர்விகா | தமிழ் | 3 |

| | | | |
|---|---|---|---|
| | | நடனம் | 2 |
| **104** | ச. தனராஜ் | புவியியல் | 2 |
| **105** | ச. ஜோன் | அரசியல் | 1 |
| **106** | சு. சரண்யா | அரசியல் | 2 |

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில்

## "A" தரச் சித்தி

| இல | பெயர் | |
|---|---|---|
| 1 | செல்வி வி. கஜந்தினி | 8 A |
| 2 | செல்வி க. தர்சிகா | 6 A |
| 3 | செல்வன் க. பகீரதன் | 6 A |
| 4 | செல்வி யோ. அபிஷா | 5 A |
| 5 | செல்வன் க. மோகனதாசன் | 5 A |
| 6 | செல்வி க. சுகந்தினி | 5 A |
| 7 | செல்வி சி. சர்வேஸ்வரன் | 4 A |
| 8 | செல்வி க. தனுசிகா | 4 A |
| 9 | செல்வி வி. விஜிதா | 4 A |
| 10 | செல்வி பா. தர்ணிகா | 4 A |
| 11 | செல்வன் சு. சுகிர்தன் | 3 A |
| 12 | செல்வி ம. அபிதா | 3 A |
| 13 | செல்வன் பு. சேந்தன் | 2 A |
| 14 | செல்வன் நா. கிறிஸ்ரீன் | A |
| 15 | செல்வன் க. லோஜினி | A |
| 16 | செல்வி யோ. ருவேதிகா | A |
| 17 | செல்வி செ. சோபிகா | A |
| 18 | செல்வி சா. யுசிதா | A |

## க.பொ.த உயர்தரப் பரீட்சையில்"A" தரச் சித்தி

| இல | பெயர் | | பாடம் |
|---|---|---|---|
| 1 | செல்வி தே. கம்சிகா | A | இணைந்த கணிதம் |
| 2 | செல்வி சோ. உஷாந்தினி | A | பொருளியல் |
| 3 | செல்வன் பே. அலெக்சன் | A | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் |
| 4 | செல்வி அ. எஸ்தர் | A | கிறிஸ்தவ நாகரிகம் |
| 5 | செல்வி சு. சிந்துஜா | A | நடனம் |
| 6 | செல்வி க. தமிழினி | A | இந்துநாகரிகம் |

## 2019 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்கள்

| | |
|---|---|
| 1. செல்வி வி. கஜந்தினி | 8 A, B |
| 2. செல்வி க. தர்சிகா | 6 A, 3 B |
| 3. செல்வன் க. பகீரதன் | 6 A, B, 2 C |
| 4. செல்வி யோ. அபிஷா | 5 A, 2 B, 2 C |
| 5. செல்வன் க. மோகனதாசன் | 5 A, B, 2 C |
| 6. செல்வி க. சுகந்தினி | 5 A, B, 3 C |
| 7. செல்வன் சி. சர்வேஸ்வரன் | 4 A, 2 B, 2 C, S |
| 8. செல்வி க. தனுசிகா | 4 A, 3 B, 2 C |
| 9. செல்வி வி. விஜிதா | 4 A, 3 B, 2 C |
| 10. செல்வி பா. தர்ணிகா | 4 A, 2 B, 2 C |
| 11. செல்வன் சு. சுகிர்தன் | 3 A, 4 B, 2 C |
| 12. செல்வி ம. அபிதா | 3 A, 3 B, 3 S |

## 2019 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 1. செல்வி தே. கம்சிகா | A, B, C | கணிதத்துறை |
| 2. செல்வி சோ. உஷாந்தினி | A, B, C | வணிகத்துறை |
| 3. செல்வன் பே. அலெக்சன் | A, B, C | கலைத்துறை |
| 4. செல்வி அ. எஸ்தர் | A, B, C | கலைத்துறை |
| 5. செல்வி சு. சிந்துஜா | A, 2 C | கலைத்துறை |
| 6. செல்வன் கோ. மிறோஜன் | 2 B , C | தொழில்நுட்பத்துறை |
| 7. செல்வன் க. கமலரூபன் | B, C, S | தொழில்நுட்பத்துறை |
| 8. செல்வி ப. சிந்துஜா | B, C, S | தொழில்நுட்பத்துறை |
| 9. செல்வி சி. தனுஜா | 2 B , C | கலைத்துறை |
| 10. செல்வன் கு. வசந்தரூபன் | 2 B , C | விஞ்ஞானத்துறை |
| 11. செல்வி த. பிரியங்கா | 2B, C | வணிகத்துறை |
| 12. செல்வி பா. குலமதி | 2 B, S | விஞ்ஞானத்துறை |
| 13. செல்வி ம. துஸ்யந்தி | B, 2S | கலைத்துறை |

## 2019ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்

1. செல்வன் ச. கிருஸ்ணா - கொழும்புப் பல்கலைக்கழகம்
2. செல்வன் ச. சஜீவன் - ரஜரட்டைப் பல்கலைக்கழகம்
3. செல்வன் சி. தூயவன் - ஊவா பல்கலைக்கழகம்
4. செல்வி கி. பிரியா - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 2016, 2017ம் ஆண்டுகளின் பெறுபேற்றின் அடிப்படையில் கல்வியியல் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள்

1. செல்வி க. அபிராமி
2. செல்வி க. சரண்சியா
3. செல்வி தே. றோமிலா
4. செல்வி ந. தீபிகா

# ஞாபகார்த்தப் பரிசில்கள்

**அமரர் சின்னத்தம்பி தம்பிராசா ஞாபகார்த்தப் பரிசு.**

கல்லூரியின் முன்னாள் உப அதிபரும், பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் உருவாக்கத்திற்கு உழைத்தவர்களுள் ஒருவரும் சங்கத்தின் ஆரம்ப காலத் தலைவரும் சமய, சமூக உணர்வாளருமாகிய அமரர் சின்னத்தம்பி தம்பிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரது அன்புத் துணைவியாரான திருமதி மனோன்மணி தம்பிராசா அவர்களால் வழங்கப்படும் பரிசினை 2019 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் **கணித பாடத்தில் “A” தரப்** பெறுபேற்றினைப் பெற்ற பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

1. க. பகீரதன்
2. சி. சர்வேஸ்வரன்
3. யோ. அபிசா
4. வி. கஜந்தினி
5. க. தனுசிகா
6. க. தர்சிகா

**அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி ஞாபகார்த்தப் பரிசு**

அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி ஞாபகார்த்தமாக அன்னாரது அன்புப் புதல்வன் குடும்பத்தினராகிய திரு திருமதி சச்சிதானந்தன் சுந்தரேஸ்வரி குடும்பத்தினரால் வழங்கப்படும் பரிசினை 2019ம் ஆண்டு க.பொ.த சாதாரணப் பரீட்சையில் **சங்கீத பாடத்தில் “A” தரப்** பெறுபேற்றினைப் பெற்ற பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

1. சி. சர்வேஸ்வரன்
2. யோ. அபிசா
3. வி. விஜிதா

**அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை ஞாபகார்த்தப் பரிசுகள்**

கல்லூரியின் முன்னாள் அதிசிறந்த விளையாட்டு வீரரும் காரைநகரில் விளையாட்டுத்துறையின் முன்னோடியுமாகிய அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை ஞாபகார்த்தமாக அன்னாரது அன்பு பெறாமகனான திரு மாணிக்கம் கனகசபாபதி அவர்களால் வழங்கப்படும் பரிசினை 2019 ஆம்

ஆண்டின் சிறந்தமெய்வல்லுனர்களாக பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

- மெய்வல்லுன வீரனாக **செல்வன் V. துஸ்யந்தன்**
- மெய்வல்லுன வீராங்கனையாக **செல்வி கி. சர்மிளா**

**அமரர் நாகமுத்து கனகசுந்தரம் ஞாபகார்த்தப் பரிசு**

கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், கல்லூரிக் கீதத்திற்கான பண்ணை இயற்றி இசையமைத்தவருமாகிய அமரர் நாகமுத்து கனகசுந்தரம் ஞாபகார்த்தமாக அன்னாரது அன்பு மகன் கனக சிவகுமாரன் அவர்களால் வழங்கப்படும் பரிசினை 2019ம் ஆண்டுக்கான சிறந்த மாணவியாக செல்வி ஆ. அமிர்தா பெற்றுக்கொள்கின்றார்.

**அமரர் பொன்னம்பலம் தர்மநாயகம் ஞாபகார்த்தப் பரிசு**

கல்லூரியின் பழைய மாணவரான அமரர் பொன்னம்பலம் தர்மநாயகம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் பரிசினை 2019ம் ஆண்டு க.பொ.த சாதாரணப் பரீட்சையில் **வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பாடத்தில் "A" தரப்** பெறுபேற்றினைப் பெற்ற பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

1. க. பகீரதன்
2. சி. சர்வேஸ்வரன்
3. ம. அபிதா
4. யோ. அபிசா
5. வி. கஜந்தினி
6. க. சுகந்தினி
7. க. தர்சிகா
8. வி. விஜிதா



# மருத்துவக்கலாநிதி வி. விஜயரட்ணம் நம்பிக்கை நிதியத்தின் நிறுவுநர்

# குழந்தை மருத்துவநிபுணர் மருத்துவகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரத்தினம் அவர்களைப் பற்றிய குறிப்புக்கள்

பிறந்த இடம் : வலந்தலை, காரைநகர்

தந்தை பெயர் : விஸ்வலிங்கம்

தாய் பெயர் : ஞானசுந்தரம்

ஆரம்பக் கல்வி : இலகடி சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை

தரம் 6 முதல் க.பொ.த (சாதாரணம்) தரம் வரை : காரைநகர் இந்துக் கல்லூரி

க.பொ.த (உயர்தரம்) : தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி

மருத்துவப் பட்டப்படிப்பு : பேராதனைப் பல்கலைக்கழகம்

சேவையாற்றிய இடங்கள் : 1) நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலை, குழந்தை நல மருத்துவப் பிரிவு

2) Colombo Lady Ridgeway Children Hospital

இலங்கையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது பிரித்தானிய நாட்டிற்குச் சென்று குழந்தை நல மருத்துவத் துறையில் உயர் கல்வியை மேற்கொண்டு (MRCP (UK), DCH (London), DCCH (Edin) ஆகிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக திரும்பிச் செல்லமுடியாத நிலையில் கனடாவிற்குச் சென்று குடியேறிய இவர் அங்கு குழந்தை மருத்துவத் துறையில் மேலதிக கல்வியையும் பயிற்சியையும் மேற்கொண்டு FRCP (C) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்குச் (USA) சென்ற இவர் இரைப்பை மற்றும் குடல் சம்பந்தமான நோய்களுக்கான மருத்துவத்திலும் (Gastroenterology), ஊட்டச்சத்து தொடர்பான மருத்துவத்திலும் (Nutrition) நிபுணத்துவப் பயிற்சியினை நிறைவுசெய்து சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர். இங்குள்ள Detroit, Chigago ஆகிய மாநிலங்களிலுள்ள வைத்தியசாலைகளில் ஆறு ஆண்டுகள் சேவையாற்றிய பின்னர் கனடாவிற்கு திரும்பி வந்து இங்குள்ள பின்வரும் பிரதான வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல வைத்தியசாலைகளிலும் தமது நிபுணத்துவம் மிக்க குழந்தை மருத்துவ சேவையை வழங்கி பிரபல்யம் பெற்று விளங்கினார்.

1) Toronto Sick Children's Hospital
2) Toronto Western Hospital
3) Humber River Region Hospital

தற்போது ரொறன்ரோவிலுள்ள இரு நகரங்களில் தனிப்பட்ட முறையிலான (Private) மருத்துவ சேவையை வழங்கி வருகின்றார்.

இவரது நிபுணத்துவம் மிக்க சிறப்பான மருத்து சேவை காரணமாக இங்குள்ள மக்களின் சிறப்பாக தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்று விளங்குகின்றார். அதேவேளையில் இவரிடத்தில்

காணப்படுகின்ற சமூக அக்கறையும் அது சார்ந்து தாராள சிந்தனையுடன் உதவி வருவதும் காரணமாக கனடா வாழ் தமிழ் மக்களின் நன்மதிப்பினையும் பெற்றுள்ளார்.

தாம் பிறந்த காரைநகர் மண் மீதுள்ள ஆழமான பற்றுதல் காரணமாக அதன் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை செய்து வருகின்றார்.

தாம் பிறந்த மண்ணிற்கும் கற்ற பாடசாலைக்கும் பெரும் புகழ் சேர்த்து வருகின்றார்.

# கல்லூரிக் கீதம்

**இராகம் - பிலஹரி** **தாளம் - ஆதி**

**பல்லவி**

தாய் மலரடிபணிவோம் நம் கல்லூரி
தமிழெனுமமுதினைப் பருகிடநிலைகொண்ட

(தாய்)

**அனுபல்லவி**

உவமையிலாததோர் உமையவள் ஞானத்தை
உண்டருள் மதலையின் உயர் பெயர் தாங்கும் நம்

(தாய்)

**சரணம்**

**இராகம் - பூபாளம்**

அன்றொருநாட்பலவாண்டுகளின் முன்னர்
அன்புருநெஞ்சினன் ஆய சயம்புவின்
சிந்தனையில் தவயோகப் பொருளுருவில்
வந்தனைநம்தமைவாழ்விக்கமகிழ்வொடு

(தாய்)

**இராகம் - அடானா**

இன்னிசையணிந்தனம் பொன்னிழும் செல்வியை
இன்தமிழ் சாயையின் ஏந்திழைஅம்மையை
கற்பனைத் தேனினைக் காவியரசத்தினை
அற்புதத்தேவியைஆவியைக் கருணையின்

(தாய்)

**இராகம் - சண்முகப்பிரியா**

இயலிசையாயினபலவிதக் கலைகளும்
ஏந்தியவாணியைவிஞ்ஞானசக்தியை
பேணியபெருந்தவபேற்றினையூற்றினை
மானியால் தமிழ்பாவால் வாழ்த்துவம் வம்மிங்கள்

(தாய்)